சார்பு நீதிமன்றம், அவிநாசி

**MCOP.No. 20/2020**

**நாள் : 03.11.2023**

**PW1 : பழனிசாமி**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் அனைபாளையத்தில் வசிக்கிறேன். விபத்து நடந்தபோது மொபட்ட இருசக்கர வாகனம் ஓட்டி சென்றேன். அந்த வாகனத்திற்கு பதிவு சான்றிதழ் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வாகனம் வேறு ஒரு நபர் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெயர் நினைவில் இல்லை. நான் இருசக்கர வாகனத்தை 5 ஆண்டுகளுக்கு முன்பே வாங்கிவிட்டேன். பெயர் மாற்றம் செய்வில்லை. 2000 -வது ஆண்டு மாடல் வாகனமாகும். இருசக்கர வாகனத்திற்கு முறையான புதுப்பிப்பு, தகுதி சான்றிதழ் செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. வாகனத்தை ஓட்டுனம் போது நான் தலைகவசம் அணியவில்லை. எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. இருசக்கர வாகனம் காப்பீடு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தவறால் இவ்வழக்கு விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாமலும், மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் இல்லாமல் வாகனத்தை சாலையில் இயக்கும் தகுதியற்ற வாகனத்தை ஓட்டி சென்று நானாக விபத்து ஏற்படுத்தியதால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. குற்றவியல் நீதிமன்றத்தில் இந்த விபத்து சம்பத்தமான வழக்கு எதிரி மீது குற்றம் நிருவப்படததால் எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்து இரண்டு நாட்களுக்கு பிறகு தான் புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் தெரிவித்தவாறு விபத்து நடத்திருந்தால் உரிய நேரத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. முறையான ஓட்டுனர் உரிமம் மற்றும் முறையான காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் உள்ள வாகனத்தை தான் மிதமான வேகத்தில் 1ம் எதிர்மனுதாரர் இயக்கினார் என்றும், எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாமலும், மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் இல்லாமல் வாகனத்தை சாலையில் இயக்கும் தகுதியற்ற வாகனத்தை ஓட்டி சென்று நானாக விபத்து ஏற்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தலை கவசம் அணிந்து சென்றிருந்தால் தலையில் காயம் ஏற்படிருக்காது என்று சொன்னால் சரியல்ல. போக்குவரத்து செலவு ரூ.12,500/- ஐ மருத்துவ செலவாக காட்டியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எந்த நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்று சொன்னால்சரியல்ல. விபத்தின் போது எனக்கு எந்த வேலையும், வருமானமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் மிகையானது

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.11.03 13:23:25 +0530

என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.11.03 13:23:30 +0530

Subordinate Judge,
Avinashi.